<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 313/2006</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 25.08.2025**

**பெயர் – இராதாகிருஷ்ணன்**

**த/பெ – நாராயணசாமிநாயுடு**

**சாட்சி – DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.24**.p.m

<u>**குறுக்கு விசாரணை–**</u>

1. வழக்கு என் மீது எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் சொத்துரிமை கோரியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் , 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரம் செல்லாது என கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாந்தகுமாரி உயிருடன் இருக்கும்போதே இடைக்கால மனு 1433/2006 இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனு 26.02.2008–ல் தாவா முடியும் வரை பிரதிவாதிகள் அதில் பிரவேசிக்க கூடாது என உத்தரவு ஆனது என்றால் சரிதான்.

2. நான் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போதே இடைக்கால மனு எண் 06/2022 எதிரிடை கோருரிமை கோரப்பட்டது என்றால் சரிதான். அதில் சாந்தகுமாரி வாரிசுகள் பதில் தாக்கல் செய்து நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் அந்த இடைக்கால மனுவில் பதில் தாக்கல் செய்த பிறகு நீதிமன்ற உத்தரவின் மூலம் ரூ. 15,61,000 செரலுத்த வேண்டும் என்றும் 26.07.2024 – ல் உத்தரவானது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ 13 – 26.07.2024–ல் இந்த வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று தாக்கல் செய்த மனுவானது 19.08.2024 தேதிக்கு முன்பு வழக்கின் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த வேண்டும் என்று உத்தரவானது. அதன் பிறகு நீதிமன்றத்தில் கட்டணத்தை கட்டாத காரணத்தினால் 05.09.2024 ல் அந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. கணகராஜின் மகன் அசோக் என்பவர் எனக்கு பரிசயமானவரா என்றால் பரிசயமானவர். வா.சா.ஆ–2 ல் உள்ள கையெழுத்து சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அவருடையதா என்று கேட்டதற்கு ஆம் என்று பதில் அளித்தார்.

4. கிரையத் தொகை ரூ. 4,75,800 க்கு பெறப்பட்டதா என்றால் ( சாட்சி முதியவராக இருப்பதால் அவரால் ஆவணத்தை சரியாக பார்க்க இயவில்லை) சாட்சி இந்த கேள்விக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. வழக்கறிஞர் மீண்டும் அந்த கேள்வியை வாங்கினீர்களா என்று கேட்டதன் பெயரில் வாங்கினேன் என்று பதில் அளித்தார்.

**விசாரணை முடியும் நேரம். 12.45.p.m.**